இன்றைய செய்தி நாளைய வரலாறு
முரசொலி
நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி
திங்கள்கிழமை 10-11-2025

# கருப்பு - சிவப்பு - நீலம்!

“கருப்பு சிவப்பு நீலம் இணைந்தால் எந்தக் காவியும் நம்மை எதுவும் செய்ய முடியாது” என்று உறுதியாக முழங்கி இருக்கிறார் மாண்புமிகு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள். மாண்புமிகு துணை முதலமைச்சர் உதயநிதி அவர்களால் ஒருங்கிணைக்கப்பட்டு ‘அறிவுத் திருவிழா’ நடைபெற்று வருகிறது. இதனைத் தொடக்கி வைத்து உரையாற்றும் போதுதான் இப்படிக் குறிப்பிட்டார் முதலமைச்சர். ‘அறிவுத் திருவிழா’வின் தொடர்ச்சியாக ‘முற்போக்கு புத்தகக் கண் காட்சி’ வள்ளுவர் கோட்டத்தில் நடைபெற்று வருகிறது. நவம்பர் 16 வரை இது நடைபெறும்.

இந்த புத்தகக் கண்காட்சியானது தி.மு.க. புத்தகக் கண்காட்சியாக மட்டுமில்லாமல், முற்போக்கு புத்தகக் கண்காட்சியாக அமைக்கப்பட் டுள்ளது. காரல் மார்க்ஸ், தந்தை பெரியார், அண்ணல் அம்பேத்கர் ஆகிய மூவர்தான் முகப்பில் அலங்கரிக்கிறார்கள். இதனை மனதில் வைத்துத்தான், **“கருப்பு - சிவப்பு - நீலம் இணைந்தால் எந்தக் காவியும் நம்மை எதுவும் செய்ய முடியாது”** என்றார் முதலமைச்சர்.

இதைத் தான் பகுத்தறிவுப் பகலவன் தந்தை பெரியார் அவர்கள் விரும்பினார்கள். இந்த நாட்டில் கம்யூனிஸ்ட் கட்சி அறிக்கையை முதலில் தமிழில் மொழிபெயர்த்து வெளியிட்டவர் தந்தை பெரியார். அண்ணல் அம்பேத்கரின் ‘ஜாதியை ஒழிக்க வழி’ என்ற உரையை தமிழில் மொழி பெயர்த்து வெளியிட்டவர் தந்தை பெரியார். மதத்தை பற்றி லெனின் சொன்னதை, இங்கர்சால் எழுத்துகளை, பெர்னாட்ஷா எழுத்துகளை தமிழில் மொழி பெயர்த்து வெளியிட்டார் பெரியார்.

சுயமரியாதை இயக்கமானது, சுயமரியாதைச் சமதர்ம இயக்க மாகவே செயல்பட்டது. இக்கொள்கை உருவாக்கத்தில் தந்தை பெரியா ருக்கு முழுத் துணையாக இருந்தவர் சிந்தனைச் சிற்பி சிங்காரவேலர். **‘உங்கள் சுயமரியாதை இயக்கத்தைப் போல வேறு எந்த இயக்கமும் நமது சமூக ஊழல்களை இந்தளவுக்கு எதிர்க்கவில்லை’** என்று சிங்காரவேலர் எழுதினார்.

பெரியாரும் சிங்காரவேலரும் இணைந்து சுயமரியாதை இயக்க சமதர்மக் கட்சியாரின் உத்தேச வேலைத் திட்டத்தை உருவாக்கினார் கள். சுயமரியாதை சமதர்மக் கட்சி உருவாக்கப்பட்டது. **‘உங்கள் சுயமரியாதைத் திட்டத்தில் அடங்கிய சமூகசீர்திருத்தங்கள் யாவும், சமதர்மத் தோற்றத்தின் அறிகுறியாக தோன்றுகிறது’** என்று சிங்காரவேலர் பேசினார். **“ஒரு காலத்தில் உலகம் முழுவதும் பரவப் போகிற சமதர்ம இயக்கத்தை தமிழ்நாட்டில் இவ்வளவு சிறு காலத்தில் நாடு முழுமைக்கும் விளங்கச் செய்வது ‘குடிஅரசு’ இதழின் மகத்துவம் ஆகும். நமது காலத்தில் இதற்கு இணை இல்லை என்றே சொல்லலாம். ஏழைத் தொழிலாளர்கள், விவசாயிகள், திக்கற்றவர்கள், தாழ்த்தப்பட்ட வர்கள் ஆகியோருக்கு ‘குடிஅரசே’ பரிந்து பேசி வருகிறது. சுருக்கமாகச் சொன்னால் பாமர மக்களை ஆதரித்துப் பேச தமிழ்நாட்டில் ‘குடிஅரசு’ ஒன்றே உள்ளது”** என்று எழுதினார் சிங்காரவேலர்.

சமீபகாலமாக தோழர் ஜீவாவை மையமாக வைத்து ஒரு சர்ச்சை எழுந்து வருகிறது. சுயமரியாதை இயக்கத்தில் இருந்த ஜீவா அதில் இருந்து வெளியேறினார் என்பது உண்மைதான். ஆனால் பிற்காலத்தில் தந்தை பெரியாரின் பணிகளை முழுக்க முழுக்க ஒப்புக் கொண்டு ஜீவா பேசி இருக்கிறார் என்பதே முழு உண்மை ஆகும்.

**“பெரியார் அவர்கள் சுயமரியாதைக்காரர் அல்ல என்று சொல்லி விட்டு வெளியேறியவன் நான். 16 ஆண்டுகள் கழித்து அவரோடு ஒரே மேடை யில் அமர்ந்து உள்ளேன். ஆனால் இன்றைய தினம் பெரியார் அவர்களு டைய அரிய பெரிய சமூக சேவையை எல்லாம் கண்ட பிறகு, தமிழ்நாட்டின் தலைவர் பெரியார் என்று மனப்பூர்வமாக மட்டுமல்ல, அறிவுப்பூர்வமாக சரித்திரத்தின் நடைமுறையிலே கண்ட உண்மையின் பூர்வமாக பெரியார் அவர்களுக்கு ஈடு இணை யாரும் இல்லை எனச் சொல்வதற்கு நான் இங்கே நிற்கிறேன். புத்தருக்குச் சமமென்றோ, சாக்ரடீசுக்குச் சமம் என்றோ கூற வரவில்லை. பெரியாரை பெரியார் என்றும், அய்யாவுக்குச் சமம் அய்யா என்றும் தான் சொல்ல வருகிறேன்.”** என்றார் ஜீவா. (27.11.1951 விடுதலை)

இது சிவப்பின் நட்பு என்றால், அயோத்திதாசப் பண்டிதரை, தனது முன்னோடியாகவே பெரியார் அறிவித்தார். 1940களின் தொடக்க காலத்தில் ஒரு கூட்டு இயக்கத்தை பெரியார் அவர்கள் ஒருங்கிணைத்த போது அதில் பெருந்தலைவர் எம்.சி.ராஜாவும், இரட்டமலை சீனிவாசனும் இடம்பெற்றார்கள். எம்.சி.ராஜாவை அமைச்சர் ஆக்க வேண்டும் என்று தொடர்ச்சியாக குரல் கொடுத்தார் பெரியார். இதனை அமைச்சராக இருந்தபோது எம்.சி.ராஜா அவர்களே சொன்னார்கள்.

தந்தை பெரியாரும் அண்ணல் அம்பேத்கரும் ஒரே சிந்தனை கொண்டவர்கள். அறிமுகம் இல்லாத காலத்திலேயே ஒரே கருத்தை பேசியவர்கள். மதம் மாறுவதற்கு முன்னால், பெரியாரின் ஆலோச னையைக் கேட்டவர் அண்ணல். பெரியாரோடு முரண்பட்ட சிலர் அம்பேத்கரைச் சந்தித்தபோது, **‘தமிழ்நாட்டுக்காகவே ராமசாமி பெரியார் இருக்கிறாரே’** என்று சொன்னவர் அவர்.

**இத்தகைய கருப்பு - சிவப்பு - நீலம் நட்பானது இன்னும், இன்றும் தொடர்ந்து வருகிறது. அரசியல் நட்பாக, தேர்தல் கால நட்பாக மட்டுமல்லாமல், கொள்கை நட்பாகத் தொடர்கிறது. வரலாற்றுக் கால நட்பானது, வரலாறு காணாத தொடர் வெற்றிகளையும் பெற்றுத் தருகி றது. கொள்கை உறவே வெற்றிக்கு அடிப்படை ஆகும்.**



கழகத் தலைவரும், முதலமைச்சருமான மு.க. ஸ்டாலின் அவர்கள் தலைமையில் நேற்று (9.11.2025) முகாம் அலுவலகத்தில், வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்தப் பணிகள் (SIR) குறித்து, கழக மாவட்டச் செயலாளர்கள் கூட்டம் காணொலிக் காட்சி வாயிலாக நடைபெற்றது. இக்கூட்டத்தில், கழக பொதுச் செயலாளர், அமைச்சர் துரைமுருகன், பொருளாளர் டி.ஆர். பாலு எம்.பி., முதன்மைச் செயலாளர் – அமைச்சர் கே.என். நேரு, இளைஞர் அணி செயலாளர், துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின், துணை பொதுச் செயலாளர்கள், மாவட்டச் செயலாளர்கள், அமைச்சர் பெருமக்கள், நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், தலைமைக் கழக நிர்வாகிகள், தொகுதி பார்வையாளர்கள் கலந்து கொண்டனர்.

## அரியலூர் மாவட்டக் கழகக் கூட்டம்!

### அமைச்சர் சா.சி.சிவசங்கர் பங்கேற்பு!

அரியலூர்,நவ,10

அரியலூர் மாவட்ட கழக ஒன்றிய,நகர,பேரூர் கழக செயலாளர்கள் கூட்டம் மாவட்ட கழக அலுவலகத்தில் கழக சட்டத்திட்ட திருத்தக்குழு இணை செயலாளர் சுபா.சந்திரசேகர் தலைமையில் நடைபெற்றக் கூட்டத்தில் மாவட்ட கழக செயலாளர், தமிழ்நாடு அரசு போக்குவரத்து மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் சா.சி.சிவசங்கர் கலந்துகொண்டு வருகின்ற 11ஆம் தேதி கழகத் தலைவர் முதலமைச்சர் தளபதி மு.க.ஸ்டாலின் அவர்களின் உத்தரவின்படி நடைபெற உள்ள ”மத சார்பற்ற முற்போக்கு கூட்டணியின் மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம் குறித்தும் மற்றும் கழக ஆக்கப் பணிகள் குறித்தும் ஆலோசனைகள் வழங்கி உரையாற்றினார்.

உடன் ஜெயங்கொண்டம் சட்டமன்ற உறுப்பினர் க.சொ.க.கண்ணன், மாவட்ட கழக துணை செய லாளர்கள் சி.சந்திரசேகரன், லதா பாலு, ஒன்றிய கழக பொறுப்பாளர்கள் தனசேகர், இரா. கென்னடி, பூ.செல்வராஜ், இரா.மணிமாறன், மா.அன்பழகன்,ரெ. சக்கரவர்த்தி, கோ.அறிவழகன், ஆர்.கலியபெருமாள், வி.எழில் மாறன், இரா.அண்ணாதுரை, ப. தனவேல், தெய்வ. இளையராஜன், நா.கணேசன், பொன். செல்வம், கே.ஜி.எஸ்.முருகன்,

இரா.செந்தில்குமார், நகர கழக செயலாளர்கள் இரா.முருகேசன், வெ.கொ.கருணாநிதி, பேரூர் கழக செயலாளர் ப.கோபாலகிரு ஷ்ணன், பொதுக்குழு உறுப்பினர் இரா.பாலு, மாவட்ட பொறியாளர் அணி அமைப்பாளர் கே.சி.லூயிகதிரவன் மற்றும் மாவட்ட ஒன்றிய, நகர கழக நிர்வாகிகள் பங்கேற்றனர்.



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களை நேற்று (9.11.2025) முகாம் அலுவலகத்தில், நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் கே.என். நேரு அவர்கள், தனது பிறந்தநாளையொட்டி சந்தித்து, வாழ்த்துப் பெற்றார்.

## பீகார் மாநில முன்னாள் துணை முதல்வர் தேஜஸ்வி யாதவ் பிறந்த நாள்!

### முதல்வர் மு.க.ஸ்டாலின் வாழ்த்து!

சென்னை, நவ. 10-

பீகார் மாநில முன்னாள் துணை முதலமைச்சர் தேஜஸ்வி யாதவ் அவர்களின் பிறந்த நாளையொட்டி, தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் வெளியிட்டுள்ள சமூக வலைதளப் பதிவு வருமாறு:-

**தம்பி தேஜஸ்வி யாதவ் அவர்களுக்கு இனிய பிறந்தநாள் வாழ்த்துகள்! பீகாரில் புத்துணர்வு பெற்றுள்ள சமூகநீதி இயக்கத்தின் உந்துசக்தியாக எழுந்து, கோடிக்கணக்கானோருக்கு நம்பிக்கையளிப்பவராகத் தாங்கள் இருக்கிறீர்கள்.**

**தங்களது தலைமையில் ஒரு புதிய அத்தியாயத்தின் விளிம்பில் பீகார் இருக்கும் நிலையில், சமத்துவம், தரமான கல்வி, வேலைவாய்ப்புகள், மாண்பு என அவர்களது எதிர்பார்ப்புகளைத் தாங்கள் நிறைவு செய்வீர்கள் என நம்புகிறோம். இந்த வரலாற்றுப் பாதையில் தொடர்ந்து வலிமையோடும், நல்ல உடல்நலத்தோடும், துணிச்சலோடும் தாங்கள் தொடர விழைகிறேன்.**

இவ்வாறு முதல்வர் அவர்கள் தெரிவித்துள்ளார்.



### புதுக்கோட்டை, திருச்சியில்

## முதல்வர் மு.க.ஸ்டாலின் இன்று கள ஆய்வு!

### திட்டங்களைத் தொடங்கி வைத்து நல உதவிகள் வழங்குகிறார்!

*புதுக்கோட்டை, நவ. 10-*

*முதலமைச்சர் மு.க. ஸ்டாலின், புதுக்கோட்டை மற்றும் திருச்சி மாவட்டங்களில் கள ஆய்வுப் பயணம் மேற்கொண்டு, பல்வேறு முடிவுற்ற பணிகளை தொடங்கி வைத்து, புதிய திட்டப்பணிகளுக்கு அடிக்கல் நாட்டுகிறார்.*

*முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் திருச்சி மற்றும் புதுக்கோட்டை மாவட்டங்களில் இன்று கள ஆய்வு மேற்கொள்கிறார். அதன்படி, புதுக்கோட்டை மாவட்டம் கீரனூர் மூகாம்பிகை கல்லூரி மைதானத்தில் இன்று நடைபெறவுள்ள அரசு விழாவில் 767 கோடி ரூபாயில் புதிய திட்டங்களுக்கு அடிக்கல் நாட்டுகிறார். இந்த நிகழ்ச்சியில் பல்வேறு முடிவுற்றப் பணிகளைத் திறந்து வைத்து, நலத்திட்ட உதவிகளை வழங்கி, விழா பேருரை யாற்றுகிறார்.*

*இதையடுத்து, திருச்சி செல்லும் முதலமைச்சசர் மு.க.ஸ்டாலின், அங்கு 10 கோடி ரூபாயில் மூத்த குடி மக்களின் நல்வாழ்வை மேம்படுத்திட 25 முதியோர் மனமகிழ் வளமையம் அன்புச்சோலை திட்டத்தைத் தொடங்கி வைக்கிறார். இந்த அன்புச்சோலை திட்டம் மூத்த குடி மக்களின் ஆரோக்கியமான வளர்ச்சியில் கவனம் செலுத்தும் வகையில், சமூக மையங்களாகச் செயல்படும் என்று கூறப்பட்டுள்ளது.*

*மதுரை, கோவை, திருச்சி, சேலம், திருப்பூர், ஈரோடு, தூத்துக்குடி, வேலூர், தஞ்சாவூர், திண்டுக்கல் ஆகிய 10 மாநகராட்சிகளில் தலா இரண்டு வீதம் 20 அன்புச்சோலைகள், தொழில்துறை மாவட்டங்களான ராணிப்பேட்டையிலும், கிருஷ்ணகிரியிலும் 2 அன்புச்சோலைகள் தொடங்கப்பட உள்ளன.*

*சென்னை மாநகராட்சியில் தண்டையார்பேட்டை, சோழிங்கநல்லூர், விருகம்பாக்கம் ஆகிய இடங்களில் 3 அன்புச்சோலைகள் என மொத்தம்10 கோடி ரூபாய் மதிப்பீட்டில் தொடங்கப்பட்டு பொழுதுபோக்கு அம்சங்கள், யோகா, நூலகம் மற்றும் தேவையான திறன் மேம்பாடு சேவைகள் வழங்கப்பட உள்ளதாக தமிழ்நாடு அரசு தெரிவித்துள்ளது.*




வடக்கு மண்டலம், கள்ளக்குறிச்சி தெற்கு (ம) வடக்கு மாவட்டத்திற்குட்பட்ட, 4 சட்டமன்ற தொகுதிகளின் தேர்தல் பார்வையாளர்கள், பணிக் குழு ஒருங்கிணைப்பாளர்கள், வாக்குச்சாவடி நிலை முகவர் 2, தகவல் தொழில்நுட்ப அணி மற்றும் வழக்கறிஞர்கள் ஆகியோர்களுக்கு வடக்கு மண்டல பொறுப்பாளரும், பொதுப் பணித்துறை அமைச்சருமான எ.வ. வேலு வாக்காளர்கள் சிறப்பு திருத்தம் குறித்து ஆலோசனைகள் வழங்கினார். உடன் மாவட்ட செயலாளர்கள் வசந்தம் கார்த்திகேயன், உதயசூரியன், சட்டமன்ற உறுப்பினர் மணிகண்ணன், நாடாளுமன்ற உறுப்பினர் மலையரசன், தொகுதி தேர்தல் பார்வையாளர்கள் இரா.ஸ்ரீதரன், பெருநற்கிள்ளி, தாமரைக்கண்ணன், வ.அன்பழகன், மூக்கப்பன் உட்பட கழக நிர்வாகிகள் உள்ளனர்.